உ

சிவமயம்.

# மதுரைச்
# சிலேடைவெண்பா.

இஃது

கா-பசசையப்பமுதலியார்

கல்விச்சாலைத்தமிழ்த்தலைமைப்புலமை

காஞ்சீபுரம்

சபாபதிமுதலியாரால்

இயற்றப்பட்டு


பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியார்

மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண௵ மார்கழி௴.

சென்னை.

ஒருவகையாலியன்றதொடர்சொல் பலபொருளின் து
தன்மைதெரியவருவது சிலேடை அலங்காரமாம் ...... *

இவ்வாறன்றி

ஒருசொல்லே பலபொருட்பெற்றிதரவந்தாலும் - சி
லேடைஅலங்காரமாம்.... ............ ...... * 

அது

செம்மொழிச்சிலேடையென்றும் பிரிமொழிச்சிலே
டையென்றும் - இரண்டுவகைப்படும் - அவற்றுள் செம்
மொழிச்சிலேடையாவது ஒருவகையால்நின்று பலபொ
ருள்படுவது - பிரிமொழிச்சிலேடையாவது ஒருவகையா
ல்நின்றசொல்லைப்பிரித்துத் தொகைவேறுபடுத்துப்பல
பொருள்கொள்வது........................ ...*

தண்டியலங்காரசூத்திரம்.

ஒருவகைச்சொற்றொடர் பலபொருட்பெற்றி தெரித
ரவருவதுசிலேடையாகும்......... ...... *
அதுவே - செம்மொழிபிரிமொழியெனவிருதிறப்படும்

இச்சிலேடைவெண்பாபிரிமொழிச்சிலேடை.

நேரிசைவெண்பா.

ஒருசொற்கிருபொருளுற்றோங்குவெண்பாமாலைத் ... *
திருமதுரைச்சொக்கர்பதஞ்சேர்த்தான் - தருமருவு ... *
பொன்னுலகும்போற்றுபுகழ்க்காஞ்சிமாநகரின் ...... *
மன்னுசபாபதிப்பேர்மால்.................. *

இஃது

திருவாவடுதுறையாதீனவித்வான்
தாண்டவராயசுவாமிகளியற்றியது.

உ

சிவமயம்.

# மதுரைச்சிலேடைவெண்பா.

(காப்பு.)

தென்னன்மதுரைச்சிலேடைவெண்பாக்கூற... ......*
என்னன்மதியேயிறைஞ்சுவோம் - துன்னியசீர் .....*
விஞ்சித்தியாதரித்துமைவுபரனீன்றருளும்.... .....*
நஞ்சித்தியானைபதநாம்.................... .......*

குருவணக்கம்.

தேவார்மதுரைச்சிலேடைவெண்பாநூறும்..........*
ஓவாதுலகம்பினுரைத்திடவே - பாவோர் ........... *
திருஞானசம்பந்தத்தேசிகன்றருள்வாழ்த்தில் ...........*
வருஞானசம்பந்தவாழ்வு..... ..... .... .............*

பூநாரரசனைவேள்பூதான்கிரேணுறிதே.... ...... ....*
பாந்தாதாவந்துன்மதுரையே - நீந்தாதா ... .......*
யாகண்டலனாக்கடித்தபழிதீர்த்த.......................*
யோகண்டலனுருவப்பு ... ........ ...... ...(௧)

தனதிருசெங்கோன்மன்னர்தக்கவர்கையாள் ..... *
மனுமுறைமேதருமதுரையே - கனமருவு ..... ... *
நாற்கோட்டியானை நலியோடிருவினைநா ..... ... *
யேற்கோட்டியானையிடம்.......................... (௨)

வீறமருள்பெறுவான்வேள்காமுகர்பண்பு.......... *
மாறவஞ்செய்யுமதுரையே - கூறுங் ... .......... *
கடம்பவனத்தைக்கடிநகராச்செய்வேய் ................ *
இடம்பவனத்தையிடம் ....... ......... ....... (௩)

தத்துதயிர்க்குடங்கணல்லதிருநீறுசைவர்... ....... *
மத்தகங்காட்டுமதுரையே - சத்தி ... ........... *
தடாதகையாகத் தனியருள்செய்தோன்றீ ... ......... *
விடாதகையாகன்விருப்பு.......................... ... (௪)

தாக்குமன்னர்சொக்கேசர்தாள்பரவுமும்பரவ்வூர் ... *
மாக்களைப்போற்றுமதுரையே - வேட்க்குள்வரத் ... *
தக்கவனப்பன்றடாதலைகன்யவேட்கவன்பாய்ப் ...... *
புக்கவனப்பன்புரம்......... ....... ............. (௫)

பூண்டவன்பின்மேவினரும்பொன்னனையார்தம்வாயு *
மாண்டுவராநன்மதுரையே - வேண்டுதிறம் ......... *
உள்ளியம்பலத்தினும்மேலாட்டார்க்கொல்வோனுக்கொள் *
வெள்ளியம்பலத்தினன்வீடு......................... (௬)

சொல்லுமரனருடையுஞ்சூழுமவசாலயமும் ...... .... *
வல்லியங்காட்டுமதுரையே - புல்லவே ........ ... .. . *
முன்னடமலையளித்தார் மோலியிற்கொள் வோர்குறளுக் *
கன்னடமலையளித்தாரார்வு .. ........ ..... ... ...(எ)

நீதியுடையோர்கள்புகழ் நீடுமனைதோறுமலர் .... ......*
மாதிரமேவுமதுரையே - ஆதரவிற்........ .... .. *
கொள்ளுமனத்தண்குழியாறழைத்தோனன் .... ....... *
புள்ளுமனத்தனுவப்பு ........................... ..... (அ)

சொல்லுமணத்தினிலுஞ்சோதிநடத்தும்முழவ......*
மல்லரிகொட்டுமதுரையே - தில்லையெனப்..........*
பேரோதங்காட்டினன்பெட்குமாமிக்குமனங் ..... *
காரோதங்காட்டினன்காப்பு ............... ... ... (௯)

பாலவிழியான்புகழைப்பாடார்க்குச்சோலையுறு .....*
* மாலதுகமேவுமதுரையே - சீல.......... .... .........*
மலையத்துவசன்வரவழைத்தோனேற்று...... ......*
நிலையத்துவசனிலை ........... .. ...................(௰)

செஞ்சொற்கலம்பகமுஞ்செம்மைத்துறவினரும் .... *
வஞ்சித்துலறயார்மதுரையே - எஞ்சலிலா ... ........*
உக்கிரப்போரண்ணற்குறுதந்தையானூர்ந்து..........*
புக்கிரப்போரண்ணற்புரம்........ .... ............. (௰௧)

---

* மாலதி - குருக்கத்தி - கம்-ஆகாயம்.

விண்டிருக்குமாடவர்பான்மேவுபொழின்மலர்ப்பால் *
வண்டேயாருமதுராயே - மண்டிமயில் ............ *
செண்டுவளையதன்சிறுவனுக்கீழ்வான்மேரு............ *
கண்டுவளையத்தன்களிப்பு .................. (௰௨)

பட்டநுதலார்தனமும்பாடுகிளிக்கூடும் ............... *
வட்டிலொளிருமதுராயே - நெட்டிலைய ............ *
வேலினுணந்தவிரிநீர்சுவற்றுவித்தான் ............ *
ஆலினுணந்தனகம்.............................(௰௩)

நேசித்திடுசெழசநீற்சிவயோகருணர்.................. *
வாசித்தவர்சேர்மதுராயே - பேசுமரி ............... *
கோலமுடியானதுவிழக்கோபித்தான் .............. *
காலமுடியான்களிப்பு............................ (௰௪)

பூத்தமலர்கொண்டரனைப்பூசிப்போர்யோகியர்கள்... *
யாத்திரைப்படைக்குமதுராயே - ஏத்துமலை...... *
செண்டாலடிப்பித்தம்தவன்முனிவரர்கண் ......... *
மண்டாலடிப்பித்தன்வாழ்வு ......................... (௰௫)

ஓதுசைவர்தங்கட்குறுநியாயநூலினர்க்கு .......... *
* வாதுளமன்னுமதுராயே - தீதன் ............ *
மறைதனைக்கத்தமஞ்ந்துளாதமோரோர்பால் ...... *
உறைதனைக்கத்தனுவப்பு ........................ (௰௬)

---

* வாதுளம் - ஓராகமம்.

செல்லூர்பொழிலிடத்துச்சேயிழையார்கொங்கைகண்டு
வல்லூறுமன்னுமதுரையே - எல்லூரும் ……………*
ஆணிக்கனகத்தடல்விலோன்விற்றருள்செம் ……….*
மாணிக்கனகத்தன்வாழ்வு……………………….(௰௭)

அண்டர்தொழுங்கோயிலன்பர்சிவயோக………….*
மண்டபமன்னுமதுரையே - மிண்டிவரும்………..*
வேலாவலையம்வெருவச்செய்வோனடியர் ………..*
பாலாவலையன்பதி……………………………… (௰௮)

நிலைமைவழக்கால்வணிகச்செல்வன்கதிர்வரல்பூ ……….*
மாமனைநாடுமதுரையே - ஆமுளத்தன் ………….*
பாக்காளையேவினனட்டானகர்ப்புரக்க…………*
மாக்காளையேவினன்வாழ்வு ……………………. (௰௯)

பாடுமிசையாழுக்கும்பண்புமிகுகுடிக்கு…………….*
மாடகமேவுமதுரையே - நாடரிய……………………*
நல்லசித்தராறுநறுமலர் தூய்ப்போற்றவெல்லாம்….*
வல்லசித்தரானார்மனை ………………………. (௨௰)

எம்மிகுசைவரோத்தவருமயனார்……………………*
* வாமனம்போற்றுமதுரையே - நாமக்கல்……….*
வேழமருத்தினார்வெம்பரித்தென்னன்முனை……….*
வேழமருத்தினார்வீடு…………………………. (௨௰௧)

---

* வாமனம் - பதினெண்புராணத்தொன்று
வாமனம் - தாவும் அன்னம்.

தண்டுறைசேர்சோலையினுந்தக்கமலர்த்தொத்துகளும் *
வண்டலமருமதுரையே - அண்டரிய.................. *
நந்தாவளமெய்தாநாசச்சமணர்விடுந் ......... ....... *
நந்தாவளமெய்தான்சார்வு .... .... ... ..... (உஉ)

ஞானத்தவம்புரிவோர்நாடோறுங்கண்டுதொழ ....... *
மானத்திவருமதுரையே - மோன.......... ... ..... *
விருத்தகுமாரவிழைபாலனை........................ *
* மருத்தகுமாரன்மனை.... ..........................(உங)

ஆரணங்களுர்குயமுமாற்றஞ்மிகுமரசும் ................ *
வாரணமேமேலோங்குமதுரையே - நேர்விசயன்......... *
போரினடித்தார்பொலஞ்சீறடிமாற்றி.......... ... .... *
வரினடித்தாரிடம்............... ..................ட(உச)

துய்யதிருவிழவுஞ்சூழமன்னர்தங்கரமும்.......... *
வையம்பணியுமதுரையே - பொய்யை ................. *
✡ விரும்பழியஞ்சினன்வெம்பாமலாள்வோன்...... *
அரும்பழியஞ்சினுணர்வு .. ...... ...... ... (உரு)

வெற்றிமேவோர்மீதுகணைமெய்த்தவத்தோர்தீநரகில்.... *
மன்னவருந்தார்மதுரையே - துன்னும் ............ *
அரும்பாதகத்தற்கருள்வோன்பொய்நெஞ்சை ...... *
விரும்பாதகத்தன்விருப்பு........................ (உசு)

---

* மரு - வாசனை - தகு - பொருந்திய - ஆரன் ஆத்திமாலையன்.

✡ அழிகின்றபஞ்சேந்திரியங்களினுல் - நான்வெம்பாமல்.

ஊனமிலாக்குடிப்பாலெய் துமூல்லையந்திணைப்பான் .. *
மானங்குலவுமதுரையே - ஆனகுருப் .... ............*
பன்னிகாரந்தன்பரிவிற்றெட்டோனைக்கொல் .........*
தன்னிகரந்தன்றலம்.................. ... .. ..........(உஎ)

பன்னுகலைப்பாவலரும்பாசமறுக்குந்தவரு .... .......*
மன்னவரைமேவுமதுரையே - என்னுடைப்பொய்... *
பின்னுகமெய்வித்தானுன்பெட்கும்பாண்டியனால்...*
வன்னுகமெய்வித்தான்வாழ்வு .... .......... (உஅ)

சீதவாவிப்புனலுந்தேங்கமழும்பூங்கொடியு ........*
மாதரங்கங்காட்டுமதுரையே - ஓதுதக்க ............*
னைவவதைத்தானவின்றடர்ப்பித்தோன்மாய ... ...*
ஆனைவவதைத்தானகம்.........................(உகூ)

தண்டாமரைமலரிற்சாரும்பொழிலிடத்தில் ....... .. *
மண்டுகேந்தாவுமதுரையே - எண்டாழ்வே ...........*
னிக்காட்டிட்டார்க்குநிலவினரோரன்பருக்காய் ....*
மெய்க்காட்டிட்டார்க்குவிருப்பு...................(௩௰)

* ஊனமகலரிதாரம்மன்புடையவரொம் ................*
மானகமேவுமதுரையே - தேனி........................*
னலவாக்கிழியார்நவின்றோர்தென்னற்கீந்த.... ... ......*
உலவாக்கிழியாருவப்பு .... ........ ........... ....... (௩௧)

---

* அரிதாரம் - மான்வயிற்றிலுண்டாகும்.

ஒருபுறச்சமயத்துற்றோர்பொதிகையுறு ……… ……… *
வாதங்கிளைக்குமதுரையே - மோதமரில் ……………… *
நன்றுவளைவிற்றானு நாணுநுதலார்கையிட……………… *
அன்றுவளைவிற்றானகம் ………………………………… (௧௨)

எண்ணுமுழவர்குழுவெம்மான்பதமெடுத்து ……… *
மண்ணைபுடனுடுமதுரையே - ஒண்ணுதலார்க் ………… *
* சட்டமாசித்தியாங்கன்றருள்வோன்யோகமரும் …. *
அட்டமாசித்தியானூர்வு ……………… ……… …… (௧௩)

தண்ணப்பொழிலிடத்துஞ் சங்கரனூர்மெய்யிடத்தும் *
வண்ணக்கணிசேர்மதுரையே - எண்ணும் ……… *
☆வலச்சினைபங்கிட்டாவகையெனையாள்வோனூன் …. *
இலச்சினையங்கிட்டானிடம் …. …………………… (௧௪)

❈ யோகமுடையோரிடத்துமோதமலைவாவியினும் … *
வாகனமன்னுமதுரையே - சோகமிகு ……………… *
தென்னர்படைப்பாற்றிகழருளானீர்ப்பந்தர் ……… *
நன்னர்படைப்பானகர் … ……… … ……… ……… (௧௫)

தண்டாமரைவயலுந்தக்கபெரியோர்கரமும் ……… *
வண்டாணமேற்குமதுரையே - தொண்டாரும் … … *
பொன்னனையாளன்புறவிரதவாதஞ்செய்…………… *
மன்னனையாளன்மனை … ……… …… ……… (௧௬)
❈ மாசு - மாசினை-அட்ட-கெடுத்த இத்தி - இத்திமரம்.

---

☆ வல்-வலிய - அச்சின்-உடலின் - ஐயம் - கபம்.
❈ போகம் - செல்வம்.

வாரமிகுமன்பருக்குமாரனம்பிற்குந்தணந்தார் ...... *
மாரகங்கூடாமதுரையே - சீரிலகும் ......... *
ஆர்த்தாரனையநாளுமகிழ்த்தானன்பு ......... *
சேர்த்தாரனையனுன்சேர்வு ......... (௩௭)

தொண்டுசெயுமன்பர்தமைத்தொன்மைமூவாவுழவர் *
மண்டலப்போற்றுமதுரையே - பண்டிலவா ......... *
வாலரிக்கோட்டைவழங்கினன்மார்புறுமா ......... *
* மாலரிக்கோட்டைமனை ......... (௩௮)

காமணிகராடவர்பாற்கந்தமிகுசோலையின்பால் ..... *
✡ மாமைதிகழுமதுரையே - நாமரியாம் ......... *
வமனுவைத்தாணிகழான்வழக்குரைக்க ......... *
மாமனுவந்தான்மனை ......... (௩௯)

மானமடவார்கருமாடமணிக்கொடியும் ......... *
வானந்திகழுமதுரையே - ஆனபுகழ்த் ......... *
தென்பாண்டியன்றன் சிவலோகங்காணுமா ......... *
றன்பாண்டியன்றனகம் ......... (௪௰)

போதார்பலவிருக்கப்புண்ணியர்க்காணிற்சேட்டை *
மாதோட்டங்கொள்ளுமதுரையே - தீதோராப் ... *
பாணனுளாகப்பகர்விறகுவிற்றவன்சொல் ......... *
பாணனுளாகன்பதி ......... (௪௧)

---

* மா - பன்றி-மாலரி-திருமால் - கோடு-கொம்பு
ஐ - சுவாமி.

✡ அரியாம்-திருமாலாகும்-வ-அம்பு- மன்-பொருந்திய
ஆவம் - தூணி.

துன்னியவாளாட்டத்தூயமடவார்கள் .................. *
மன்னரங்காடுமதுரையே - பன்னுமன்பார் .......... *
சேரலனார்தந்திருமுகங்காணத்தந்த .................. *
* ஆரலனார்தமகம் ...................................... (௪௨)

தண்டாவிசையாழுஞ்சாருமலர்ச்சோலைகளும் .. ...*
வண்டாரமேவுமதுரையே - கொண்டாசை ........... *
இன்னம்பலகையாங் கிட்டான்பாணன்பாடத் ... ...*
தன்னம்பலகையான்சார்பு ........................ (௪௩)

தேனுலவுசோலையினுஞ்செல்வமிகுமாடவர்க்கும் ..... *
வானரஞ்சேருமதுரையே - மானவிசை ...... ....... *
வல்லவிறலியார்வாதுவலச்செய்தவர்சேர் ............... *
☆ நல்லவிறலியார்நாடு ...... .. ............... (௪௪)

வாகைபெறுகரியும் வாசமிகுபொழிலும் ............ *
மாகந்தரிக்குமதுரையே - மோகமிகத் . ......... *
தோயென்னவந்தான்றலைத்தோன்பன்றிக்குட்டி .... *
தாயென்னவந்தான்றலம் ........ ..... .... ......... (௪௫)

போகமிகுமனைகள்பூண்டமதவேழங்கள் .............. *
மாகவளங்கொள்ளுமதுரையே - சோகமறு ....... .. *
பன்னுழையராகமத்தப்பன்றிக்குட்டிக்கருள்வோர் ... *
என்னுழையராகமத்தரில் ........ ..... .... ..... (௪௬)

---

* ஆரல் - நெருப்பு.
☆ இறலியார் - இத்திமரத்தின்கீழிருப்பவர்.

ஆயகுடிகடம்பாலந்தண்பொழிற்பானீர்..............*
வாய்மைதிகழுமதுரையே - தூய்மைமிகு ..............*
பாரத்துவாசப்பறவைக்கருள்வணன்பர் ........................*
ஊரத்துவாசனிடம் ...................................... (௪எ)

துன்னியபல்போகங்கள் சூழ்ந்துவலம்போற்றார்க்கு...*
மன்னரகங்காட்டுமதுரையே - முன்னா ........... *
பொற்றாமரையார்புனன்மூழ்கவிட்டருள்பூ ... ..........*
நற்றாமரையார்நகர் ... .... ..................................(௪அ)

மேன்மைதிகழ்மாதர்குயம்விறியவைகாநதமு...... *
மான்மதம்வேட்குமதுரையே - ஊன ..... ......... ........*
உருவாலவாயானுமவாமலானுந் .. ....... ..... ... .........*
திருவாலவாயான்திகழ்வு .. ........................... (௪௯)

பேசரனார்மோலிபிரிந்திருக்குமாதருரு ... .... .. ...*
மாசுணமன்னுமதுரையே - நேசவன்பிற் ... .... ...*
றிண்ணவம்பெய்தாச்செழியன்பொருட்டாக ,........*
வண்ணவம்பெய்தார்மனை......................... (௫௰)

மேவுமணிவீதியினில்வீறுதுறவறத்தோர் ...........*
மாவிரதமேவுமதுரையே - பூவின்.......................*
இலகையருள்வாரொழிற்புலவர்க்குப் ..................*
பலகையருள்வார்ப்தி........................................ (௫௧)

தேசமிகுசோலையினுஞ்செல்வமிகுபுண்ணியர்க்கும்.. *
வாசவனஞ்சாருமதுரையே - பாசவினைத்............. *
தாவங்கெடுத்தார்தருமிக்காச்செய்புள்சொல .. ......... *
நாவங்கெடுத்தார்நகர்.......................................... (௫௨)

மெய்யாந்தவர்முனிவுமேவுமுழவர்நல ............... *
வையாதரிக்குமதுரையே - பையார் .................. *
மருங்கணாயேற்றினர்வாழ்கீரனனா ......... ......... *
இருங்கணாயேற்றினரில்.... ............................(௫௩)

பாங்கினுடன்காளிபகருமரக்கலங்கள் .... ........ *
வாங்கலையூருமதுரையே - ஓங்கு .. ............. *
வலக்கணந்தந்தார்வகுப்பினுளார்கீரற் .... ............ *
இலக்கணந்தந்தாரிடம்..... ................... (௫௪)

பொன்னாரன்னைகபொலிதரளமார்வாரி... .. ..... *
மைந்நாகமன்னுமதுரையே - முன்னாந்... ... .... *
❊ தடுமாற்றந்தீர்த்தச்சங்கத்தார்க்கருள்கம் ... .... *
இடுமாற்றந்தீர்த்தாரிடம்....... ....................(௫௫)

தானமருய்வெற்பிலரன்றன்கரத்துவில்லாப்பொன் ...*
மானவனைவைக்குமதுரையே - ஞானவிடைக்......... *
காடன்பிணங்கத்தன்காதலியொடும்மறைய............ *
நாடன்பிணங்கத்தனாடு............................. ... (௫௬)

---

❊ கம் - முடியில் இடும் - தரித்திருக்கிற - ஆறு - கங்காநதியாகிய - அம் - அழகிய - தீர்த்தர் - தீர்த்தத்தார்.

ஓதுகணிதர்களுமூட்டுமறச்சாலைபரு ............... *
மாதவனாநாடுமதுரையே - சீதமிகு ............... *
வானம்படுத்தாழ்கடலில்வலைவீசி ............... *
மீனம்படுத்தார்விருப்பு ............... (௫௭)

நிணங்காலயின்மன்னர்நேரிழையார்கூந்தல் ............... *
வணங்காவெல்லுமதுரை - உணங்காது ............... *
வாதவூரண்ணன்பணையாள்வோர்வண்ணவிடை ............... *
போதவூரண்ணல்புரம் ............... (௫௮)

தாணுவெளிர்பொற்கிழியுந்தண்ணிலவார்முத்தினமும் *
மாணிக்குநவுமதுரையே - காணும் ............... *
நரிபரியாகவரநல்கினேன்மூன்றும் ............... *
எரிபரியாகவரனில் ............... (௫௯)

ஞானமிகுமன்பர்நாடுபொதுமாதர்குயம் ............... *
வானகந்துன்னுமதுரையே - பானைப் ............... *
பரிசம்புவாக்கினற்றன்னுமன்றசொற்றேன் ............... *
பரிசம்புவாக்கினன்பற்று ............... (௬௰)

மெய்கண்டமாலடியார்வேந்தர்கடங்கையிலகு ............... *
வைகுந்தஞ்சாருமதுரையே - வையுறை ............... *
மாவுக்கங்காத்தார்முன்மண்சுமந்துவெந்தபிட்டு ............... *
மாவுக்கங்காத்தார்மனை ............... (௬௧)

பன்னுசிவயோகியரும்பார்த்திபரும்வேளிரெனும் ...*
மன்னாநீக்குமதுரையே - தென்னன் ............ *
சுரந்தணிவித்தகங்காளன்றாப்கங்கை ................ *
கரந்தணிவித்தகன்காப்பு.......................... .... (௯௨)

மேவியமீனக்குரண்டம்வீழ்குரங்குதெங்கிளநீர்..... *
வாவியின்பாறுமதுரையே - ஒவில் ............... *
வழுவேறச்செய்தாவகைநாடாத்தீபர் ... ... .......... *
கழுவேறச்செய்தார்களிப்பு ......... .............. (௯௩)

நறுவியபொற்றாமரைப்பூநன்ஞானசிவநேசம் ... ....... *
மறுகுளத்தில்லாமதுரை - குறுகும் ..................*
எரிபுகலக்கண்ணிலாதேலிங்கமாதி... .... .. ........ *
கரிபுகலக்கண்ணினன்காப்பு ......... ......... .... .... (௯௪)

வெருவவிலாப்படையுமின்சிறையவண்டு .......... *
மருவலரைச்சூழுமதுரை - பெருகிவரும் ............ *
மோகமந்தந்தான்முதிராதருச்சிக்க ................ *
ஆகமந்தந்தானகம் ................... ...... ... ........ (௯௫)

சேரும்புனலாறுஞ்சேயிழையார்கொங்கைகளும் ..... *
வாரங்கடக்குமதுரையே - நேருநுதன் ............... *
* மாண்டிநாட்டத்தன்வளமருவுஞ்சாலைகள்சூழ் ...... *
பாண்டிநாட்டத்தன்பதி ...................... (௯௬)

---

தீநாட்டத்தன் - திநாட்டத்தன்-எனக்குறுகியது.

அஞ்சார்வயிரமணிபாங்குயர்நெற்போரினிடை ......*
மஞ்சாடிபேறுமதுரையே - நெஞ்சார..........*
மானியாருக்குநன்மாதாமுன்வாழ்த்தவருள் ..........*
ஞானியாருக்குநகர்.............................. (௬௭)

உறுதேர்ப்பரியானையோதுசித்திபெற்றோர் .........*
மறுகூடுசெல்லுமதுரை - பெறுமன்பு ..............*
கூர்த்தமதியக்குலச்சிறைபோற்றுஞ்சடையில்........*
ஆர்த்தமதியளகம்.............................. (௬௮)

விஞ்சுபடுக்கையகத்தும்வீறுதவசிகளும்...........*
மஞ்சஞ்செறியுமதுரையே - செஞ்சொலுணர்.........*
கல்விமானத்தங்கருதுபராஞ்சோதிதொழும் .... ...*
நல்விமானத்தநகர்.............................. (௬௯)

மாளவஞ்சுவோரைமன்னர்வாட்குமருத்துவர்நேர் ...*
வாளமரினீக்குமதுரையே - நீளுமொளித் ..........*
தோளாமணியனையன்சோமசுந்தரன்னரவ .... .. .....*
வாளாமணியனையன்வாழ்வு.......................... (௭௰)

சிறந்தமன்னர்தம்வேலுஞ்செய்தவருங்காம.............*
மறந்திகழுமாமதுரை - நிறைந்தெனுயிர் ..... ...*
ஆவைவகையாற்றுவழூஉவெனுங்குறளுக் ................*
கீவைவகையாற்றானிடம்.............................. (௭௧)

காக்குமன்னராவத் துங்காணுமணிகத்தினுநால் .... *
வாய்க்குஞ்சரஞ்சேர் மதுரையே - தேக்கன்பாற் ......*
சந்தனந்தேய்த்தார்தருமூர்த்தியார்போற்றும்...... *
அந்தநந்தேய்த்தாரகம்.................................(௭௨)

அளியமெனில் மூதியந்தண்பொதிய.............. .....*
வளவனாநாட்டுமதுரை - பளதில் ....................*
துவாதசாந்தத்தன் றொழுமடியாருள்ளந்............ *
துவாதசாந்தத்தன் றலம்..............................(௭௩)

நரிபரியாத்தந்தநாணுடுடன்னர்சேனை........... ...*
வருமாவணிபாமதுரா - தரபிறவி ..... ...... ...*
விஞ்சொக்கலிங்கண்ணுமனீங்கவீட்டருளும் ...... .....*
அஞ்சொக்கலிங்கணகம்.................................(௭௪)

வீரூர்மனைமலரிஃவேந்தர்மணிமாலிருடான் ........*
மாறுகனஞ்சேர்மதுரைபே - பேறு ...... ....*
மூலவிலிங்கத்தன் முன்னட்டவஞ்செய்த........... *
கோலவிலிங்கத்தன்குடி .................... .........(௭௫)

நேயமொடுயோற்றவரனீடியதோல்வெய்யபுலி...... *
மாயவனக்காக்குமதுரையே - தோய்குநர்க்குப்......*
பூதிதீர்த்தத்தன்புரமருளவேயமைத்த................*
ஆதிதீர்த்தத்தனகம்.................................(௭௬)

எவமில்நஞ்சாறார்தமையேந்துமெழின்மாதர்தமை ... *
மாவிரதிவாழ்த்துமதுரையே - மேவசலப் ......... *
பெண்ணச்சிரத்தப்பெருவடிவன்கார்தவழும் ..... ... *
வண்ணச்சிரத்தன்மனை ....................... (௭௭)

* இணக்குழுவர்சம்பந்தனொந்தையருளான ........... *
மணக்கத்தைக்கொய்யுமதுரை - பிணக்கைவெல் ... *
கட்டங்கங்கொண்டான்கரத்தியாவுமாயவற்றை ... *
விட்டங்கங்கொண்டான்விருப்பு .................. (௭௮)

வாய்ந்தமகவுமுகமாறுமிடைவிருந்து ............ *
மாந்தமருவாமதுரையே - யேய்ந்திலகு ............ *
பாசாடவியுணன்பாயாதாள்வோன்றக்கன் ........... *
மாசாடவியுணன்வாழ்வு .......................... (௭௯)

தருசீரொருதென்னன்சம்புசமணேவு ................. *
மகவானைவாட்டுமதுரை - புகுநீர் ................... *
ஒருதாமிரப்பருணியோராணிலேறி ........ ....... *
வருதாமிரப்பர்மனை ............................. (௮௰)

கடங்கான்றிடுகரியுங்காணுந்தவரு ................... *
மடங்காவிகற்பார்மதுரை - அடங்கும் .. .......... *
அறிவினையாளுனறக்கடவுளென்னு .............. *
மறிவினையாளுன்மனை .......................... (௮௧)

---

* அருளான் - அமணக்கத்தை யெனப்பிரி
த்துக்கொள்க - கட்டங்கம் - மழு.

எச்சமிகுதடமுமீறின் முனிவர்களு ............ *
மச்சஞ்செறியுமதுரையே - விச்சைகொடு ........ *
திக்கைக்குருவாய்த்தான்சேர்வான்புவியடைத்துக் ... *
காக்கைக்குருவாய்த்தான்காப்பு ............ (அஉ)

கூடத்திறப்பினிடைசோகனகம்வாவிகளின் ........ *
மாடப்புறவார்மதுரையே - கூற்ற ........ *
மண்ணுநிலையந்தாம்வளர்பூதமாயவற்றி ........ *
னண்ணுநிலயந்தானதர் ............ (அரு)

இலங்குகுரண்டம்வயலிலேத்துமன்பராங்கு ........ *
மலங்கெடுக்கமேவுமதுரை - நலங்கொடுக்கும் ........ *
அண்ணுசிவைக்காணவக்தாவென்ணுதவன்பர் ..... *
கண்ணுசிவைக்கான்களிப்பு ............ (அச)

கலபத்துநன்முளியுங்காவன்மன்னருஞ்சீர் ........ *
மலயத்திவருமதுரை - மலர்க்கே ........ *
யனகரமண்டலத்தணுதரித்தேத்துந் ........ *
தினகரமண்டலத்தன்சேர்வு ............ (அரு)

ஏணூர்குருவைப்பின்றவனேயிராயிரமா ........ *
மாணுக்கன்போற்றுமதுரையே - வீணான ........ *
இன்பவாவென்பாலிலகாதருளென்னில் ........ *
அன்பவாவென்பானகம் ............ (அசா)

ஞானசம்பந்தர்தருநற்பூதிமாதர்கள்கண் ................ *
மானிகரஞ்சாருமதுரையே - மோனமருள் ............... *
அஞ்சிவாவென்னுதரநீயென்றுன்றுயரம் ............... *
எஞ்சிவாவென்னுனிடம் ................................ (௬எ)

ஆவலொடுமேதனுமாங்கிருக்குமன்னவரு .............. *
மாவலனைத்தேடுமதுரையே - கூவிற் ................ *
பெயற்கண்ணுமையார்பெரியவடிவக் ................... *
கயற்கண்ணுமையார்களிப்பு ........................... (௬௮)

நேருமதுவைத்தடத்தில்நீருய்வயலிடத்தில் ......... *
* வாரிசங்காலுமதுரையே - சீரிய .................... *
புந்திமதியறுகஞ்சன்றலேகின்ளிப்போதும் ........ *
அந்திமதியறுகனர்வு ................................. (௬௯)

கோலுமடுக்களையுங்கூறவரிதாமளரும் ............... *
வாலுவர்நன்னுமதுரையே - ஆலும் .................... *
படவரவணிந்தார்படர்நதியுஞ்சூடக் ................... *
கடவரவணிந்தார்களிப்பு ................................ (௭0)

இதுமுதல்-முப்பொருட்சிலேடை.

செஞ்சொன்மடவார்கள்சேருமவர்வெய்யபணி ........ *
மஞ்சளைநாடுமதுரையே - விஞ்சுமருட் .............. *
சங்கரனம்பத்தருசெங்கரனம்பர் ......................... *
தங்கரனம்பன்றலம் ....................................... (௭௧)

---

வாரிசங்கு - கெடுதல்விகாரம்.

செய்கடன்கொள்வேதியர்கள் திண்ணியவேலாதிகளம் *
வைகறைநிலாவுமதுரையே - பொய்கடியும் ............*
ஆதியந்தமானாருமந்தமானார்நற். ..................*
சோதியந்தமானார் துறை .............................. (௬௨)

நேசமடவார்கூந்தனீளணிகம்வில்வமன்பர் ..............*
வாசிகைசேருமதுரையே - வசகலும் ............... ...*
அம்புவனத்தனரும்புவனத்தன்றாள் ............... .... *
நம்புவனத்தனகர் ........................................(௬௩)

தோற்றுபகைசெம்பொன்சுரும்பிசைக்கும்பூஞ்சோலை*
மாற்றலரைக்காட்டுமதுரையே - ஏற்றமொடு .......*
கண்டவிடத்தான்கருவினைநாம்விடத்தான் ............ *
அண்டவிடத்தானகம் ........................................ (௬௪)

நஞ்சணிகண்டன்முடியுநல்லார்குழனடைபோல் ......*
மஞ்சனங்கொள்ளுமதுரையே - எஞ்சலிலா.......... *
மாறுகணையான்மருவுறுவெங்கணையான் ........... ...*
தாறுகணையான்றலம் ........................................ (௬௫)

தேட்டமிகுமன்பருளஞ்சேயிழைபார்கண்மருங்குல் · *
வாட்டந்தவிருமதுரையே - கூட்டுருவம் ........ ... ...*
மையலங்காட்டினான்மாயாமற்காட்டினான் .... ........ *
தையலங்காட்டினான்சார்வு ....... ................ . (௬௬)

சிங்காரப்பொன்கொல்லர்சேர்மனையிற்பாம்பலையில் *
வங்காரமேவுமதுரையே - இங்காரும் ..................*
வேதவனத்தினான்வீழ்வெற்பனத்தினான்...............*
மாதவனத்தினான்வாழ்வு ........ .......................... (௬௭)

ஆணிபெறுவீணையாயிழையார்கண்கடைகள் ............*
வாணிகரங்கொள்ளுமதுரையே - காணும்...................*
ஒருவரையுள்ளாயுவந்தவருள்ளாய் ............... .... ........*
இருவரையுள்ளாரிடம்... ... .................................(௬௮)

வருமணித்தேர்செய்வோர்மகிழ்புலவர்வண்ண ..........*
மருவச்சந்தந்தேர்மதுரா - இருமைதரு ... .............*
ஆலவிருக்கத்தனரியவிருக்கத்தன்சீர். ......... , . . . . *
மாலவிருக்கத்தன்மனை ................................. (௬௯)

## நாற்பொருட்சிலேடை.

மண்டுவயல்சிவனூர்வாசமலர்வாவி ..... ..... ........... *
வண்டலைமேவுமதுரையே - தொண்டரொடு... ... *
வான்பரவிட்டினான்மாமலம்விட்டினான்....... ..... *
வான்பரவிட்டினான்வாழ்வு .... ... ..... .............. (௭௰)

வாழ்கமறையந்தணர்கள்வாழ்கபுவிமன்னவர்கள் ......*
வாழ்கசிவனுர்பூசைவாழ்கவன்பர் - வாழ்கசைவ ..........*
மார்க்கந்தமிழ்வேதம்வாழ்கசமபத்தலைவர் ..........*
தீர்க்கமொடுவாழ்கசெறிந்து ................................ (௱௧)

மதுராச்சிலேடைவெண்பா

முற்றிற்று.

---

விளம்பரம்-

நீதிநெறிவிளக்கவுரை ..........................*
புராணசாரம் ....................................*
கச்சிமாலை ......................................*
பரமராசியமாலை.....................................*
சிவபுண்ணியத்தெளிவு ...........................*

இவை

ஆபீசு-மூளைதையாமுதலியார்வீதியில் - ௭௧ - வது-நெம்பர்வீட்டில் விற்கப்படும்.